# எல்ல பிரதேச சபை

# பதுளை மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜுன் 18 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜுலை 10 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, எல்ல பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) மீளாய்வாண்டின் போது, முன்னைய காலப் பகுதி தொடர்பாக செலுத்தியிருந்த உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் வட்டி ரூபா 558,000 தொகையினை கடன் கொடுத்தோர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் கடன் கணக்கு வரவு வைத்துள்ளமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் மீதி ரூபா 558,000 இனால் குறைவாகவும் கடன் கொடுத்தோர் மீதி 558,000 இனால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) சபையினால் பேணப்பட்டிருந்த பேரேட்டு கணக்குகளின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 4,092,952 தொகை எனினும் அதனை ரூபா 3,517,686 தொகை என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது நிர்மாண வேலைகளுக்காக பெற்றுக் கொடுத்துள்ள முற்பணங்கள் ரூபா 487,221 உம், ஆண்டு இறுதியில் தீர்த்திருந்த போதிலும், தீர்க்கப்படாத முற்பணங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 487,221 இனால் குறைவாகவும், தீர்க்கப்படாத முற்பணங்களின் மீதி அதே தொகையால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) மீளாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளின் இறுதிக் கொடுப்பனவு ரூபா 1,471,933 தொகையினை முற்பணங்கள் என கணக்கீடு

செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான நிர்மாண வேலை செலவு ரூபா 1,471,933 குறைவாகவும், முற்பணக் கணக்கின் மீதி அத் தொகையால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாண்டின் போது சபையின் புதிய கட்டட நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,074,008 இற்கான செலவுகள், மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் அதே தொகையால் மிகையாகவும், மூலதனச் செலவுகள் அதே தொகையால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) சபையில் பேணப்படும் பதிவேடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடைவாடகை மற்றும் சந்தை குத்தகை நிலுவை வருமானம் ரூபா 824,885 தொகை எனினும், அவை ரூபா 228,308 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால், வருமான கடன் பட்டோர் ரூபா 596,577 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் போது அலுவலர்களின் சம்பளத்தில் இருந்து அறவிடப்பட்டிருந்த பதவியணிக் கடன் ரூபா 76,529 இனை, பதவியணிக் கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனினும் முற்பணம் தீர்த்தல் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் பதவியணிக் கடன் கணக்கின் மீதி ரூபா 76,529 இனால் அதிகரித்தும், முற்பணக் கணக்கின் மீதி அதே தொகையால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) 2013 நெறிமுறை அடிப்படையான அபிவிருத்தி திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 29,700 தொகையினை நிர்மாண வேலை கடன் பட்டோர் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக முற்பணக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் பட்டோர் மீதி ரூபா 29,700 இனால் மீகையாவும், முற்பண மீதி கணக்கு அதே தொகையால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த முற்பணங்களை தீர்த்தல் ரூபா 32,532 தொகையினை, வழங்கப்பட்ட முற்பணங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் முற்பண மீதி ரூபா 32,532 இனால் மிகையாகவும், ஆண்டிற்கான செலவுகள் அதே தொகையால் குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஒ) மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த 5 பல்கரும நடமாடும் கடைகளின் பெறுமதியாகிய ரூபா 132,500 தொகையினை கணக்கீடு செய்யப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு சொத்துக்கள் கணக்கில் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 132,500 வீதம் நிதிக் கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் மீதிகள் இடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 22,746,604 ஆக காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 19,759,068 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

ரூபா 23,868,012 பெறுமதியான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான விவரமான பட்டோலைகள், கணீப்பீட்டுச் சபை அறிக்கைகள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழகள் என்பன சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1980 இன் 47 இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் 2013 திசெம்பர் 06 திகதிய இலக்கம் 1840 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த 12 வர்த்தக நிலையங்களின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்த போதிலும் புதிதாக அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருக்கவில்லை. |
| (ஆ) உள்ளுராட்சி ஆணையாளரின் 2013 மே 06 ஆந் திகதிய இலக்கம் 12/ஆ/6/03(அ – எரிபொருள்) கடிதம் | அங்கீகரிக்கப்பட்டிருந்த வரையறையை மிகைத்து 378.7 லீற்றர் டீசலுக்காக ரூபா 45,225 தொகையொன்று செலவிடப்பட்டுள்ளது. |

2 நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,709,589 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 145,807 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,855,396 இற்கான அனுகூலமான முரண் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட கற்சுரங்கத்தை குத்தகைக்கு கொடுத்தல் மற்றும் கடை வாடகை நிலுவை வருமானத்தை அறவீடு செய்யும் முன்னேற்றம் பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

2.2.2 வாடகை

சபைக்குச் சொந்தமான 10 கடைகளின் வாடிக்கையாளர்களினால் வாடகை செலுத்தத் தவறியிருந்த போதிலும், அவற்றை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,889,862 இற்கான நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் வருமான அறவிடப்பட வேண்டியிருந்தது.

| | ரூபா |
|---|---|
| நீதி மன்றத் தண்டப் பணம் | 986,114 |
| முத்திரை கட்டணம் | 4,903,748 |
| | 5,889,862 |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையின்மை

(அ) சபைக்கு சொந்தமான தெமோர கற் சுரங்கம் 2004 ஆண்டிற்காக வாடகைக்கு பெற்ற குத்தகையாளரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 348,810 இற்கான நிலுவை குத்தகையினை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட காலப் பகுதியில் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த தொலைபேசி தொலைத் தொடர்பு டவர் இனை நடத்துவதற்காக துணை விதிகள் அமைக்கப்பட்டு கட்டணம் அறவிடப்படவில்லை.

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

----------------------------------------

சுபையினால் தேசிய பொறித்தொகுதி நிறுவனத்தில் இருந்து பெற்றிருந்த சேவைக்காக குறிப்பிட்ட காலப்பகுதியில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமையால் ரூபா 65,861 இற்கான தண்டப்பணம் ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்